தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம் : 'தென்றல்' சென்னை-6.

மலர் 3 | சென்னை 23-3-57 சனிக்கிழமை | இதழ் 27

டில்லி செல்லும் சொல்வலர் சம்பத்

"வடக்கு நோக்கிப் புறப்படுகின்றேன்;
வாழுந் தமிழரீர் ! வாழ்த்துமின் !— இங்கு
கிடக்குந் துயரம் கிளர்றுவன் ! வடவர்
கிறுக்கு மொழிகளை அடக்குவன்" என்றே

—அபயந் தருகிறார் சம்பத் ?

★

நாமக்கல் பாராளுமன்றத் தேர்தல் முடிவு நமக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது; காங்கிரசாருக்குப் பெருத்த அதிர்ச்சியைத் தந்தது. சொற் செல்வர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள் அந்தத் தொகுதியில் வெற்றி பெற்றார் என்ற இன்பச் சேதி தமிழகத்தில் பெருத்த ஆரவாரத்தை உண்டுபண்ணியது.

நாட்டுப் பிரிவினையைப் பற்றி வலியுறுத்த. தலைவர் அண்ணா யார் ? என்று எடுத்துரைக்க, டில்லிப் பாராளுமன்றத்தில் ஆளில்லையே எனத் துக்கித்திருந்த தி. மு. கழகத்திற்கு ஆறுதல் வழங்கும் வகையில், பெருமைப்படும் வகையில் நாமக்கல் வட்டாரத்துத் தமிழர்கள் நல்ல தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள் ! பாராளுமன்றத் தொகுதிக்குட்பட்ட சட்டசபைத் தொகுதிகளிலெல்லாம் காங்கிரஸ் அபேட்சகர்களை வெற்றி பெற வைத்துவிட்டு, பாராளுமன்றத் தொகுதியில் மட்டும் காங்கிரஸ்அபேட்சகரைத் தோல்வியுறச் செய்து, வாக்குகளை ஈ. வி. கே. சம்பத் அவர்களுக்கு அளித்திருக்கிறார்கள் என்றால், அந்த முடிவு நினைத்து நினைத்து மகிழக் கூடியதல்லவா ?

கழகத்தின் தனிச் சக்தியையும், சம்பத் அவர்களின் தனித்தன்மையையும் உணர்ந்திருக்கும் அந்தப் பகுதி வாக்காளர்கள் தமிழகத்தின் பாராட்டுதலுக்கு உரியவர்களாவார்கள்.

★

தொண்டுள்ளம்

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார்

★ தொண்டுள்ளத்தின் மாண்பினை விளக்கும் ஓர் தழுவற் சித்திரம் ★

சின்னஞ்சிறு கிரேக்க நாட்டில் ஒரு மூலையில், நாகரிகத்தில் பின் தங்கிய மாசிடோனில் பிறந்தான் சிக்கந்தர் (அலக்சாண்டர்)-அவன் சிந்து ஆறுவரை மன்னர் மகுடங்களின்மீது நடந்து உலகளந்தான்! அராபிய வீரர் பலர் இஸ்லாத்தின் ஒளியையும் வீர மரபையும் மேல் திசையில் இஸ்பானியா(ஸ்பெயின்) வரைக்கும், கீழ்திசையில் கங்கை வரைக்கும் சீனக்கடல் வரைக்கும் கொண்டு சென்று பரப்பியுள்ளனர். அராபியக்கலைஞர் மக்கமும் மதீனமும் பாக்தாதும் பாஸ்ராவும் கூர்ச்சரமும் எங்கும் மாடமாளிகைகளால் நிரப்பியுள்ளனர். அராபிய, பாரசிகக் கவிஞர், கலைஞர் தம் கவிதைகளாலும் ஓவியங்களாலும் உலகைப் புத்துலகாக்கியுள்ளனர். ஆற்றலும் அறிவும் அழகும் படைத்த வீர இளைஞரும் நங்கையரும் உலகில் எத்தனை எத்தனையோ வகைகளில் பயன்பட்டுப் பெருமையும் புகழும் நிலைநாட்டியுள்ளனர்!

'ஆனால் நான்-நான்-நான்!'

ஹசன் கண்ணீர் வடித்தான். கண்ணீர் வடிந்த அந்த முகத்தைப் பாலை நிலத்தின் தெண்ணீர் நிழற் படுத்திக் காட்டிற்று. 'அந்தக் கண்ணீரில், அந்த முகத்தில் அழகுகூட இல்லையே, இயற்கையான தோற்றம்கூட இல்லையே! நோயின் தழும்புகள் நிறைந்து கரடுமுரடான தோல், வற்றியகன்னங்கள், குழி விழுந்த கண்கள் - உலகுக்கு வேறு வகையில் பயன்படாவிட்டாலும், கண்டவரைக் கவர்ந்து மகிழ்வூட்டும் கட்டழகு இல்லாவிட்டாலும், பார்ப்பவருக்கு வெறுப்புத்தரும் அருவருப்பான தோற்றமாவது இல்லாமல் இருக்கக்கூடாதா?' என்று அவன் ஏங்கினான்.

அவன் கூனிக் குறுகிய உடல் உடையவன். கால்கள் இளம் பிள்ளை வாதத்தால் வற்றி வதங்கிச் செயலற்றிருந்தன. கைகள் நடுக்கு வாதத்தால் ஓயாது ஆட்டங் கண்டன. பாலையில் பிறந்து, பாலையில் வளர்ந்து, பாசியும் சருகும் கிழங்கும் உண்டவன் அவன். அவனுக்குக் கல்வியும் கிடையாது. நா நயமும் கிடையாது. உடல் வலுவும் இல்லை. எப்படியோ பிரயாணிகள் போக்குவரவுப் பாதையிலுள்ள நறுநீர்ச்சுனையருகே ஒரு புதர்வீட்டில் பதுங்கி வாழ்ந்தான் அவன்!

ஆண்டிகளிலும் கேடுகெட்ட ஆண்டியாக, அகதிகளிலும் கேட்பாரற்ற அகதியாக, நோயாளிகளிலும் கடைப்பட்ட ஏலமாட்டா நோயாளியாக அவன் நாட்கழித்தான்!

தன் தோற்றத்தையும் பிறர் தோற்றத்தையும் ஒப்பிட்டுக்காண மட்டும் அவனுக்குக் கூரிய கண்கள் இருந்தன. முன்னதை அவனுக்கு ஒளிக்காது காட்டக் கண்ணாடிபோன்ற சுனை நீர்ப்பரப்பும் அருகே இருந்தது. புகழ் அவன் உள்ளத்தில் ஒளித்துக் கிடந்தது-அதில் பின்னிக்கொண்டு மக்கட்பாசம், உயிர்ப்பாசம் படர்ந்து தழைத்திருந்தது. அன்புக்குப் பாத்திரமாக அவன் வாழ்வு அமையாவிட்டாலும், அன்பு சுரக்கும் தாய்மை உள்ளம் அவனுக்கு இருந்தது. ஆனால் அதன் அருமையை அவன் அறியவில்லை. அவனுக்கு இருந்த ஒரே உணர்வு, 'நாம் பயனற்ற பிறவியாய் விட்டோமே!' என்ற ஏக்கம்தான்-'நான் ஏன் பிறந்தேன், எதற்கிருக்கின்றேன்?' என்ற சிந்தனையே அவனை ஓயாது அரித்துத் தின்றது!

ஆனால் செயலார்வம் வேறு, செயலாற்றல் வேறு! அவன் வாழ்வில் செயலாற்றல் இல்லை, செயலார்வம் இருந்தது. அது உள்ளூரக் கனிவுற்று வளர்ந்தது - சிறு கண்ணீர்த்துளிகள் பெருக்கின. அக் கண்ணீர்த் துளிகள் பெரு வெள்ளங்கள் ஆற்றாத செயல்கள் ஆற்றின - பலபலர் புண்ணீர்த்துளிகள் ஆற்றி ஆறுதல் அளித்தன. ஆற்றலுடையவர் செய்யமுடிந்த, ஆனால் செய்யாத, செய்ய முனையாத சிறு செயல்கள் எத்தனையோ ஹசன் அன்புள்ளத்தின் ஆர்வ வடிவில் பொங்கி வழிந்து செயற்களம் புகுந்தன. ஆட்டிறைச்சியும் மாட்டிறைச்சியும் குழந்தைகளுக்குத் தர மாட்டாத ஊட்டத்தைத் தாய் அன்பில் ஊறிக் கசியும் இளம்பால் அளிக்குமன்றோ? அதுபோல் சின்னஞ்சிறு உயிர்களுக்கு, ஏழை எளிய மக்களுக்குப் பெருஞ் செல்வரும் பிறரும் செய்யமுடியாத உதவிகளையெல்லாம் அந்த ஏலமாட்டா அகதியாகிய ஹசன் செய்தான்.

அவனுக்குப் புகழார்வம் இருந்தது. ஆனால் இச்செயல்களை அவன் புகழுக்காகச் செய்யவில்லை. அவை புகழுக்குரிய செயல்கள் என்றே அவன் கருதவில்லை. அவன் அன்புள்ளம் இவற்றைச் செய்தது-தன் வாழ்வின் ஏக்கத்திடையே, கண்ணீர்த்துளிகள் வழிந்தோடும் கரடுமுரடான உள்ளங்களுடனேயே அவன் இவற்றைச் செய்து கொண்டு, சருகாக வாடி வதங்கிய மகிழம்பூப்போல எங்கும் மணம் பரப்பினான்.

அவன் புதர்விடு புதர்வீடாகத் தான் இருந்தது. அதை அவன் புல் வீடாகக்கூட ஆக்கவில்லை. ஆக்க முயலவில்லை. ஆனால் நறுஞ்சுனை சூழ அவன் எங்கும் நிழல்தரும் மரஞ்செடி கொடிகளும் மலர்ப் பண்ணைகளும் வைத்துப் பயிரிட்டான். அவன் ஆற்றல் சிறிதாயினும் அயர்ச்சியில்லாத அவன் முயற்சி பெரிதாய் இருந்தது. பகலின் வெப்பத்திலும் இரவின் குளிரிலும், பசியின் கடுந்துன்பத்தையோ விடாயின் வெந்துயரத்தையோ பாராமல் அவன் விடாமுயற்சியுடன் நறுஞ்சுனையைச் சுற்றியுள்ள பாலை வனப் பகுதியை ஒரு சோலை வனமாக்கினான். மக்கள் அக்காட்சியிலும் அதன் தண்ணளியிலும் மகிழ்வுற்றனர். அதைத் தெய்வச் செயலால் அமைந்த பாலைத் தண்டலை என்றனர்! ஏனெனில் சோலை வனத்தை ஆக்கிய அத்தெய்வ உள்ளம் எவர் கண்முன்னும் எளிதில் காட்சியளிக்கவில்லை - காட்சியளித்தாலும் அதன் அருவருப்பான ஏலா உருவினிடையே ஒரு தெய்வ உள்ளத்தின் எழிலை எவர் கண்டுணர முடியும்?

அவன் புதர் விடு புதர் வீடாகத் தான் இருந்தது. ஆனால் அவன் நறுஞ்சுனையைச் சூழ ஒரு படிகக் கற் பந்தலும் பைந்தளிர்க் காவணமும் அமைத்தான். பாலைவனக் கோடிவரை பலநாள் நகர்ந்து நகர்ந்து சென்று அவன் களிமண் கொணர்ந்து சுட்டுச் சிறு சிறு செங்கல்கள் ஆக்கினான். இடிந்துவிழுந்த மாடங்களை எங்கெங்கெல்லாமோ தேடி எப்படி எப்படியோ பல்வண்ணச் சலவைக் கற்கள் கொணர்ந்தான். அவன் கல்லா உள்ளம்—கலைபயிலாக் கைவிரல்கள்—ஏலா உடல் எப்படியோ அக்கற்களை இழைத்து இழைத்து அழகுப்படிமங்களாக்கின.

அழகு என்பது அன்புருவேயன்றோ? எப்படி எப்படியோ அவன் கலைஞர் எவரும் செய்தற்கரிய கலையார்ந்த ஓர் இன்பத் தண்ணீர்ப் பந்தலை அந்நறுநீர்ச் சுனையருகே எழுப்பினான். மக்கள் நறுநிழற்சோலையில் தங்கி அந்நறுநீர்ச் சுனையின் அழகில் ஈடுபட்டு நீரருந்தினர். கனிமரக்காவின் இனிய பழம் அருந்தினர். நறுமண மலர்கள் கொய்து சூடி மகிழ்ந்தனர்: இவற்றைப் பாலை வெப்பிடையே ஆக்கிப் படைத்த தெய்வத்தை அவர்கள் வாயார வாழ்த்தினர்—ஆனால் இப்போது அவர்கள் கண்காணாத் தெய்வத்தை மட்டும் வாழ்த்தவில்லை. தண்ணீர்ப் ப[...]தலைக் கண்காணாத் தெய்வம் ஆக்[...]யிருக்க முடியாது என்பதை அவ[...]கள் அறிந்திருந்தனர் - ஒரு கண்[...]கண்ட தெய்வ உள்ளம் - மனித[...] தெய்வம்தான் அதை ஆக்கியிருக்[...] முடியும் என்று கண்டனர்-அம்மனி[...]தத் தெய்வத்தையே வாழ்த்தினர்[...] ஆனால் அந்த மனிதத் தெய்வ[...] அருவருப்பான ஏலமாட்டா[...] கூனல் நோயாளி வடிவம் தாங்[...] இருக்கும் என்பதை அவர்கள் எப்[...]படி உணரமுடியும்? ஆகவே அ[...] கண்கண்ட தெய்வம்கூட அவர்[...]களுக்குக் கண்காணாத் தெய்வத்[...]தின் ஒரு பண்புடனே, தோன்[...] உருவாக. அவ் அருவருப்புருவில் உட்சுரந்து ஒளித்து நின்றது!

நன்மை - அழகு கடந்து, அறிவு கடந்து, அன்புருவான நன்மை எத்தனைநாள் மக்கள் உள்ளத்திலிருந்து மறைந்திருக்க முடியும்? இருளில் ஒளிகாணும் கதிர்போல, இரும்பைக் கவரும் காந்தம்போல, அது மக்கள் உள்ளத்தில் தெய்வம் கடந்து தெய்வ உள்ளத்தை, தெய்வ உள்ளங் கடந்து தெய்வ வடிவைக் காணும் ஆர்வம் தூண்டி வந்தது.

'பைம்பொழில் அமைந்தது யாராலே?
படிக நன்மாடம் எடுத்தவர் ஆர்?
இவற்றையெல்லாம்
எண்ணி இயற்றிய ஒருவர்—எமைப்
போல மனித உருவுடையார்—எங்
கேனும் இருந்திடல் வேண்டுமன்றோ?'

இத்தகு எண்ண அலைகள் பிரயாணிகளின் உள்ளங்களில்-செல்வர், ஏழை எளியவர் உள்ளங்களிலும் - குடிசைவாணர், அரண்மனை, மாடமாளிகைக் கோமான்கள் என்ற வேறுபாடின்றி எல்லார் உள்ளங்களிலும் - ஒருங்கே எழுந்தன. தத்தம் உள்ளுணர்வால் தூண்டப்பட்டு, அன்புகலந்த அறிவுக் கண்களுடன் எல்லாரும் எங்கும் தேடலாயினர்.

அவன் புதர் வீட்டின் சிதைந்த பகுதிகளைச் செப்பம் செய்ய வேறு ஆளில்லை. அதில் கருத்துச்செலுத்த அவனுக்கும் நேரம் இல்லை. அவன் வீட்டருகே, நாற்புறமும், பரல் கற்கள், முட்கள் நிரம்பியிருந்தன. அவை அவன் நொந்த கால்களுக்கும் உடலுக்கும் நோவளித்தன. அவன் அவற்றில் இடர்ப்பட்டு இடர்ப்பட்டு வாழ்ந்தான. அவன் அறிவு இப்பக்கம் செயலாற்றவில்லை. அவனால் அவற்றை மாற்ற இயலவில்லை. ஆனால் அதேசமயம் அவன் பாலைவன உலகின் வாழ்வையே மாற்றப் பாடுபட்டான். திட்டமின்றி, நோக்கமின்றி பெருஞ் செயல் அது என்ற எண்ணம்கூட இன்றி அவன் அதில் ஈடுபட்டான்!

பாலையிலே நறுஞ்சுனைகள் இன்பந் தருபவை. அவற்றுக்கு ஈடாக எந்த இன்பத்தையும் கூறமுடியாது. ஆனால் அவை தூர தொலைவில், பல நாள் பயணங்களுக்கு ஒரு முறையாகவே, அமைவன. அத்துடன் அவை தங்கி வாழ உதவும் நிலவர இன்பம் தருபவையல்ல. நீடித்த இன்பம் தருபவையுமல்ல. எல்லையற்ற நீடித்த துன்பத்திடையே மின்னல் போல இடையே வந்து மறையும் கண இன்பங்களாகவே அவை அமைய முடியும். நீண்ட நரகப் பரப்புக் கடந்தே இத்தகைய தனிச் சொர்க்கத்திலிருந்து அடுத்த தனிச் சொர்க்கத்துக்குச் செல்ல முடியும். சென்ற

7-ம் பக்கம்

மூன்று பிள்ளைகள்

★

தென்னாட்டின் தனிப்பெருந் தலைவர்களாக விளங்கும் மூன்று அரசியற் தலைவர்களின் குமாரர்கள் தமிழ்நாட்டுப் பொதுத் தேர்தலில் வெற்றிபெற்றிருக்கிறார்கள். அவர்கள் மூவரும் பாராளு மன்றத் தேர்வில் போட்டியிட்டார்கள்.

டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி
(ஆற்காடு ராமசாமி முதலியாரின் புதல்வர்)

சி. ஆர். நரசிம்மன் (ஆச்சாரியாரின் புதல்வர்)

சி. ஆர். பட்டாபிராமன்
(சர். சி. பி. ராமசாமி அய்யரின் புதல்வர்)

★ தேர்தலும் நாமும் ★

2

கண்ணதாசன்

தமிழகத்தின் அரசியல் துறையில் இயக்கத்தை வளர்ப்பதற்கு நாம் பெரும் பிரயாசை ஒன்றும் எடுத்துக்கொண்டதில்லை. ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று, ஆள் பிடித்து, கழகம் நிறுவி இயக்கத்தை வலுப்படுத்த நாம் சிறிதுகூடச் சிரமம் எடுத்துக்கொள்ளவில்லை. வழக்கமான கொள்கைப் பிரசாரத்தை எப்பொழுதும்போல் செய்து வந்தோம். எங்கெங்கே இயக்கம் எந்த அளவில் வளர்ந்திருக்கிறது என்கிற கணக்கை ஆராய்ந்து அறியக்கூட நமக்கு அக்கறை இல்லை. அப்படி இருந்தும் இயக்கம் வளர்ந்துள்ள விதத்தைக் கவனித்தால், நமக்கே மூக்கின் மேல் விரலை வைக்கத் தோன்றுகிறது. இந்தத் தேர்தலில் அந்த வளர்ச்சிக் கணக்கும் நம் கைக்குக் கிடைத்துவிட்டது. ஆகவே, இன்னும் சற்றுச் சுறு சுறுப்பாகவும், கிராமங்களுக்கான திட்டத்தோடும் வேலை செய்தால் தமிழகம் திராவிட முன்னேற்றக் கழக மயமாகவே திகழும்! அத்தகு சிறந்த சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

இந்த நேரத்தில், ஒன்றுக்கும் உதவாதவர்களும் உருப்படியான காரியங்களைச் செய்தறியாதவர்களும், வெளிநாட்டுக்காக இங்கே வேலை செய்பவர்களும் சிறிப்பாய்ந்து நம்மை எதிர்க்கிறார்கள் என்பதாலேதான், அவர்கள் விஷயத்தில் கடுமையான கொள்கை கடைப்பிடிக்கப்பட வேண்டுமென நான் கருதுகிறேன். அவர்கள் யாவரும் நமது அரசியல் நாகரீகத்தை, "கையாலாகத்தன"மாகக் கருதுகிறார்கள். கொஞ்சநேரம் நாம் அவர்களைக் கூர்ந்து நோக்கினாலும் போதும்; அவர்கள் என்ன ஆவார்கள் என்பது நமக்குத் தெரியும்! நிற்க.

பார்லிமெண்டரி முறையில் கழகம் காலடி எடுத்து வைத்துள்ள நேரம், மிகவும் பக்குவமான நேரமாகும். இந்த நேரத்தில் நம்மைத் தேர்தலில் ஈடுபடுத்திய நம் தலைவர்களை வாழ்த்த வேண்டும். இதற்கு முன்னால், ஈடுபட்டிருந்தாலும் சரி, கழகத்தின் சக்தி பயனற்றுப் போயிருக்கும். இப்பொழுது தேர்தலில் ஈடுபட்டதுதான் சரி. நம்முடைய பிரச்சினைகளை நுணுக்கமாக அணுகி, லட்சிய எல்லையை அடைய வேண்டிய கட்டம் வந்துவிட்டது. எதிர்க்கட்சிக்காரர்கள் பலர் மனங்கனிந்து, நம்மை "வருக" என்று அழைக்கிறார்கள். அண்ணா சட்ட மன்றத்தில் இருப்பதால், சட்ட மன்றம் உயிர் பெறும் என்ற உண்மையை அவர்கள் ஒளிக்காமல் உரைக்கிறார்கள். நம்முடைய ஒவ்வொரு வெற்றியும் பெரிதாகக் காட்டப்படுகிறது. (இதனால்தான் தோழர் ஈ. வே. ராவுக்கு மேலும் மேலும் எரிச்சல் ஏற்படுகிறது!)

அதோடு நமது தேர்தல் விஞ்ஞாபனத்தையும் அவர்கள் தங்களுக்குச் சாதகமாகக் கொள்கிறார்கள். "வகுப்புத் துவேஷமும் பிரிவினை கோஷ"மும் கணிசமான அளவுக்குக் குறைந்திருப்பதாக, 'ஆனந்த விகடன்' எழுதுகிறது.

ஆனந்த விகடனுக்குத் தெரியாது' வகுப்புத்துவேஷம் நமது கொள்கைகளில் ஒன்றாக எப்போதுமே இருந்ததில்லை என்பது. ஒரு வகுப்பின் சில முறைகளை நாம் கண்டித்து வந்ததை வகுப்புத்துவேஷமாக விகடன் கருதியிருந்தால், விகடனுக்கு இதுநாள் வரையில் விளங்க வைக்காமலிருந்ததற்காக வருந்துவோம். "பார்ப்பான் ஒழிக" "பார்ப்பானே வெளியேறு" என்பதெல்லாம் தாரக மந்திரங்களாக ஒலித்த மேடை, சமீபத்தில் இரு கொடி கட்டி ஆண்ட திராவிட கழக மேடையே தவிர, தி. மு. கழக மேடையல்ல. பார்ப்பனர்களுக்காக ரயிலில் 'ரிசர்வ்' செய்துவைத்திருப்பவர்கள், பார்ப்பனர்கள் உட்பட பல காங்கிரசுரக்காரர்களை வலிய அணைத்துவரும் தி. க. வினர்தான். தி. மு. கழகம் 'பார்ப்பனீயம்' என்னும் கொள்கையையே எதிர்த்தது. இந்த நாட்டின் குடிமக்களாக பார்ப்பனர்களை அது ஏற்றுக்கொண்டது. இந்த 'பார்ப்பனிய'த்தை விட்டு விட்டு வெகுதூரம் பார்ப்பனர்கள் வந்துவிட்டார்கள் என்கிற 'கல்கி'யின் கருத்தை ஒப்பி, அப்படி எவ்வளவு பேர் வந்திருக்கிறார்கள் என்பதை தி. மு. கழகம் கவனித்து வருகிறது. அப்படி வருபவர்களைத் தன்னிடத்தே சேர்த்துக்கொள்ள தி.மு. கழகம் அவாவுகிறது. குடியாட்சி முறையின் ஒழுக்க விதிகளோடு, தேசிய முறைகளோடு இயங்கும் தி. மு. கழகம், யாரையும் அடித்துத் துரத்திவிடும் நோக்கில் எந்தக் குரலையும் எழுப்பியதில்லை. தேர்தலில் ஈடுபடுங் கொள்கையேஇல்லாதிருந்த காலத்தில்கூட, "பார்ப்பான் வாழ்க; பார்ப்பனியம் ஒழிக!" என்றுதான் கழகம் முழங்கிற்று. ஆகவே கழகத்தின் வாதம் ஒன்றும் தேர்தல் பிறப்பல்ல. கழகம் இந்தக் கொள்கையைக் கூறியதால்தான்' தோழர் ஈ. வே. ராவும் அவரது மூன்று ரூபாய்த் தொண்டர்களும் கேலி செய்தார்கள். "பாம்பு வாழ்க; விஷம் ஒழிக!" என்று உவமை காட்டினார்கள்! "உண்மையில் பாம்புக்கு மட்டும் விஷமில்லாமலிருந்தால் நாங்கள் அதைப் பாலூற்றியே வளர்ப்போம். விஷமிருப்பதால் தான் எதிர்க்கிறோம்" என அதற்கும் தி. மு. கழகம் பதில் சொல்லிற்று. ஆகவே, தேர்தல் விஞ்ஞாபனத்தில், வகுப்புத்துவேஷம் குறைந்திருப்பதாக விகடன் கருதுவதில் அர்த்தமில்லை. எப்பொழுதுமே வகுப்புத்துவேஷம் எங்களிடம் இல்லை!

பிரிவினை உணர்ச்சியை விஞ்ஞாபனம் குறைத்துக்காட்டவில்லை. பிரிவதற்கான காரணங்களைத் தேவைகளாகக் காட்டியிருக்கிறது, முடிவை மக்கள் நிர்மானிக்கட்டும் என்பதற்காக! அதைத் தவிர, "திராவிட நாடு திராவிடர்க்கே" என்ற கொள்கையைக் கழகம் மாற்றிக்கொண்டு விட்டதாகக் கருத இடமில்லை. அந்தக் கொள்கையை மாற்றிக்கொள்வதானால், தேர்தலில் சில சில்லறைக் கட்சிகளின் கூட்டுறவுகூடக் கிடைத்திருக்கும். அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் கழகம் அதை மாற்றிவிடத் தயாராயில்லை. காங்கிரசுக்காரர்களில் சில பெருந்தலைகளின் மனதில்கூட பிரிவினை உணர்ச்சி தலைதூக்கியுள்ள நேரத்தில் கழகம் ஏன் தன் சுதியைக் குறைக்கப் போகிறது? மக்கள் ஒன்றும் இந்தக் கொள்கையை வெறுக்கவில்லை. கொஞ்சம் பொறுத்துப் பார்த்தால் விகடனே அதை ஒப்புங்காலம் வரலாம்.

தோழர் ம. பொ. சிக்குத்தான் இந்தக் கொள்கை மிகவும் அருவருப்பாக இருக்கிறது. மலரிலே மணமில்லை எனக் கருதுவோரில் மூக்குக் கோளாறு உள்ளவர்களும் இருக்கலாமல்லவா? தோழர் ம. பொ. சி. அத்தகையவர். சமீபத்தில் தோழர் பி. டி. ராசன் அவர்கள், "தி. மு. கழகந்தான் சிறந்த எதிர்க்கட்சியாக அமையமுடியும்" என்று பேசியதை வைத்து, அவர் தனது அபாரமான அரசியல் தெளிவை வெளிப்படுத்திக் கொண்டுள்ளார். கழகம், தன் கொள்கைகளை மாற்றிக்கொள்ளாதவரை, எதிர்க்கட்சியாக இயங்கமுடியாதாம்! கழகம் விடுதலை இயக்கத்தின் விரோதியாம்! தோழர் ம. பொ. சிக்கு மொத்தத்தில் நம்மைப் பற்றித் தெரிந்ததே இவ்வளவுதான்! ஏனென்றால், இதைத்தான் அவர் திரும்பத் திரும்பப் பல காலமாகச் சொல்லிவருகிறார். இவர் தியாகி-சிப்பியோடு சிறையில் இருந்தவர்-என்பதை வாலிபர் உலகம் துளியும் மதிக்காததால்தான் இந்த 'ஜன்னி' இவருக்குக் கண்டது என்று நான் கூறமாட்டேன். ஆனால், தி. மு. கழகத்தில் இருப்பவர்கள் யாவரும் விடுதலை இயக்கத்தின் விரோதிகள் என ம. பொ. சி. கருதுவாரானால் அவர் அரசியலில் ஞான சூன்யம் என்பதை மட்டும் நான் கூறமுடியும்.

கழகத்தில் வதிபவர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர், அடி உதைபட்டு அல்லல் அனுபவித்தவர்கள். துள்ளித் திரியும் பள்ளிப் பருவத்திலேயே காங்கிரசில் ஈடுபட்டு உதை வாங்கியவர்கள் காங்கிரசு "கழுதை மேயுங்களமாக" ஆனதால், தோழர் ம. பொ. சி. போன்றவர்களுக்கே அது தகுதியான இடம் என்று கருதி, தி. மு. கழகத்தில் சேர்ந்தவர்கள். இவர்கள் யாவரும் வெள்ளைக்காரனுக்கு வேண்டியவர்கள் போலவும், தோழர் ம. பொ. சி. போன்ற விராதி வீரர்கள் சூராதி சூரர்கள்தான் வெள்ளைக்காரனை எதிர்த்தவர்கள் போலவும் அவர் கருதி வருவது, பரிதாபத்துக்குரிய அவரது அறியாமையையே வெளிப்படுத்துகிறது.

தோழர் ம. பொ. சி. வேறு வேலை இல்லாததால் அரசியலில் ஈடுபட்டவர். ஆனால் கழகத் தோழர்கள், உந்தித் தள்ளப்பட்ட உணர்வின் காரணமாக அரசியலில் ஈடுபட்டவர்கள். ஆகவே போலித்தனமான-மூடத்தனமான - இந்த வாதத்தால் தி. மு. கழகம் எதிர்க்கட்சியாக இயங்கவிருப்பதைத் தடுத்துவிட யாராலும் முடியாது.

தோழர் ம. பொ. சிக்கு நான் உறுதியாகச் சொல்வேன்; அண்டம் புரண்டாலும் கழகத்தின் திராவிட நாட்டுக் கொள்கை மாறாது! ம. பொ. சி. போன்ற அழுகல் சப்பைகளின் உதவிக்காக அதை மாற்றிவிடவா கழகம் முயலும்!

—(வரும்)

காங்கிரஸ் பெரும் புள்ளிகள்!

★

◉ அரியலூர் அழகேசன் ◉ மரகதம் சந்திரசேகரன் ◉ திருமங்கலம் ராஜாராம் ◉ ஆர். வி. சுவாமிநாதன் ◉ செங்கல்வராயன் ◉ டி. கே ராமா ◉ வெங்கடசாமி நாயுடு ◉ ராதாகிருஷ்ண பிள்ளை ◉ ஐ. எ. சிதம்பரம் ◉ ஜோதி வெங்கடாசலம்.

—இவர்கள் தோற்றுப் போன பெருந்தலைகளில் மிக முக்கியமானவர்கள்.

"போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதோரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 3 ‖ 23-3-57 ‖ இதழ் 27

பாளையத்து ராஜா !

"காய் கறி வாங்கப் போவதற்கு 'நான் நீ' யென்று போட்டி போட்டுக்கொள்வார்கள் வைதிக குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள். ஏனென்றால், தாங்கள் மறுநாள் வனபோஜனத்தில் என்ன காய்கறிகளைச் சாப்பிடப் பிரியப்படுகிறார்களோ, அவைகளைத் தாராளமாய் வாங்கிக்கொள்ளலாமல்லவா?

அவர்களுடைய திருமாளிகைகளில் (வீடுகளில்) நித்தம் சமையல் செய்து சாப்பிடும் காய்கறிகளில் அவர்களுக்கு ஆர்வம் ஏன் இருக்கப் போகிறது? கத்தரிக்காய், வெண்டைக்காய், பூசணிக் காய், பெருங்காயம் ஆகிய இவை அனுதினமும் பார்த்துப் பார்த்து அலுத்துப் போனவைதானே? திருமாளிகைகளில் நித்திய தளிகைகளுக்குப் பக்கத்திலும் நெருங்காத காய்கறி தினுசுகள் சில இருக்கின்றன அல்லவா?—முருங்கைக்காய், சுரைக்காய் இத்யாதி!

இவைகளில் உச்சஸ்தானம், வெங்காயத்திற்குத்தான். வெங்காயம் என்றால் கண் எடுத்தும் பார்க்கமாட்டார்கள் வைதிகர்கள். காய்கறி விற்பனைக் கூடைகள் தெருக்கள் வழியாகக் காலை நேரங்களில் போய்க்கொண்டிருக்கும். ஆனால் வைதிகர்கள் நிறைந்த கந்தாடைத் தெரு, மாடத் தெரு, சன்னிதித் தெரு முதலிய தெருக்களுக்குள்ளே வெங்காயக் கூடை எட்டிக்கூடப் பார்க்காது!

வைதிகர்களின் பிள்ளைகளுக்கோ வெங்காயத்தைப் பார்த்தாலே ஆனந்தக் களிப்பு! வெங்காயத்தை நெய்யிலாவது எண்ணெயிலாவது வறுக்கும்போதோ, அல்லது வேறு விதமாகச் சமையல் செய்யும்போதோ, அந்தப் பரிமளத்துக்கு ஈடும் உண்டோ? அந்தப் புளியோதரைதான் நெருங்கமுடியுமா? அல்லது வெண்பொங்கல், அக்கார அடிசில் எதையும் தான் அந்த வெங்காயப் பரிமளத்துக்கு ஈடாகச் சொல்லமுடியுமா? ஆனால் பாவம், அந்தப் பிள்ளைகள் வெங்காயத்தைத் தளிகை பண்ணி எங்கேதான் சாப்பிடுவது? எப்போதுதான்?

விடுமுறை நாட்களில் வனபோஜனத்திற்குப் போகிறோம் என்றால் அவர்களுக்கு ஆனந்தம் கரை புரண்டோடும். காய்கறிக் கடைகளுக்கு ஓடி அவர்கள் முதலில் வாங்குவது வெங்காயம்தான்; அதிகமாகவே வாங்குவார்கள்.

மறுநாள் அவர்களுக்கு ஒரே வெங்காய சாம்பார்த் திருவாராதனைதான்! மனத்தைக் கவரும் சறுக்காம்பாறை விளையாட்டைக் கூட மறந்துபோவார்கள். சறுக்காம்பாறை எப்போதும் இருக்கிறதுதானே, என்றைக்கும் பார்த்துக்கொள்ளலாமே! ஆனால் வெங்காய சாம்பாரையோ அன்று தவறினால் மறுபடியும் என்று தான் தரிசிக்க முடியுமோ?

மாலையில் வீடுகளுக்குத் திரும்பிப் போவார்கள். வீட்டுப் பெரியோர்களிடம் அன்று நடந்த வெங்காய ஆர்ப்பாட்டத்தைப் பற்றிச் சொல்லவேமாட்டார்கள். அதைப்பற்றி மூச்சுக்கூட விடமாட்டார்கள்! பெரியவர்களிடம் சொன்னால் என்ன கதி ஏற்படுமென்று தெரியாதா? உடனே பஞ்சகவ்ய பிராயசித்தத்தை மேற்கொள்ள வேணுமே!

ஒருவருக்கொருவர் மெதுவாகப் பேசிக்கொள்ள நேர்ந்தாலும், "ஏண்டா! அன்று நாம் சறுக்காம்பாறையில் சக்கைப்போடு போட்டது சாளக்கிராம சாம்பார்தானே!" என்று பரிபாஷையில் பேசிக்கொள்வார்கள்.

ஆனால் இப்போது நவீன நாகரிகத்தின் பயனாக அத்தெருக்களில் வெங்காயம் சாதாரணமாக நடமாடுகிறதென்றே நினைக்கிறேன். அதைத் தெருவுக்குள்ளேயே வரக்கூடாதென்று யாரால் தான் இந்நாளில் தடுக்கமுடியும்? தடுத்தாலும் வெங்காயம் சும்மா இருக்குமா? புது அரசியல் சட்டத்தின் (கான்ஸ்டிட்யூஷன்) படி தனக்குள்ள ஜீவாதார உரிமை தடை பெற்றதென்று நீதிமன்றத்தில் வழக்குப் போட்டுவிடாதோ?"

★

இத்தனை கிண்டல்களுக்கிடையே வைதீகத்தை இவ்வளவு பலமாகத் தாக்கியிருப்பது நாமல்ல; ஒரு காங்கிரஸ்காரர். இத்தகு எண்ணம் கொண்டவர் காங்கிரஸ்காரராக - காங்கிரஸ் தலைவராக—முதலமைச்சராக-கவர்னராக இருந்திருக்கிறாரென்றால், எத்தகைய எதிர்ப்பு சக்தியாலும் வீழ்த்தமுடியாத வகையில் தூய மனிதராக அவர் வாழ்ந்திருக்கவேண்டும்! இல்லாவிட்டால் அவர் எப்போதோ 'மாஜி'யாகி இருப்பார்! பொதுவாழ்வில் பங்கேற்ற காலத்திலிருந்து கண்மூடிய காலம்வரை அவர் கண்ணியமாக வாழ்ந்துவிட்டுப் போய்விட்டார். போன தேர்தல் முடிவில் அவர் தோற்றுப் போனதைப் பேசினோம். இந்தத் தேர்தலின் முடிவில் அவர் இறந்துபோனதைப்பற்றிப் பேசவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

குமாரசாமி ராஜா என்றால் தென் மாவட்டங்களில் தனி மரியாதை உண்டு. அவர் பதவியிலிருந்தபோதும் சரி, வீட்டில் இருந்தபோதும் சரி அந்த மரியாதை அவருக்குத் துளியளவும் குறைந்ததில்லை. காங்கிரஸ் கட்சியில் அப்படிப்பட்டவர்கள் மிகக் குறைவு; அவர்களிலே முதலிடம் வகித்தார் ராஜபாளையம் ராஜா! அவரும் கண்களை மூடிவிட்டார்; காங்கிரசைப் பிரிந்துவிட்டார் என்கிறபோது அரசியலில் நேர்மையும், நாணயமும், மனச்சாட்சியும் மிக மிக அவசியம் எனத் துடிக்கும் நம்மால் வருந்தாமல் இருக்கமுடியவில்லை. ராஜா பிரதமராக இருந்தபோது கழகத்திற்கு எவ்வளவோ தொல்லைகள் முளைத்தன; எத்தனையோ தடைகள் பிறந்தன. அந்தத் தடைகளும், தொல்லைகளும், ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே இருக்கவேண்டிய அளவைக் கடந்து விடவில்லை. கழகத்தை ஒழித்துவிடுவேனென்றோ, கட்டைவிரலை வாங்கி விடுவேனென்றோ ராஜா சொல்லவில்லை. முதலமைச்சராக இருந்து, மேன்மகனாகவே நடந்துகொண்டார். காலம் அவரை இன்னும் சில ஆண்டுகள் விட்டு வைத்திருந்தால் தென்னாட்டுச் சிக்கல் அகிலம் முழுதும் அம்பலமாகியிருக்கும். கதர்ச்சட்டை அணிந்த கழகத்துக்காரராய் திராவிடநாடு பிரியத்தான்வேண்டும் என்று வலியுறுத்திப் பேசியிருப்பார் ராஜா. அவருடைய கடைசிக் காலத்தில் ராஜா கோவையில் ஆற்றிய சொற்பொழிவு தமிழகத்தில் அத்தகைய தடித்த கேள்விக் குறியைத்தான் எழுப்பிவிட்டிருந்தது. சொல்லப்படும் கருத்து அதை வெளிப்படுத்துவோரின் நிலையைப் பொறுத்தே சக்தி பெறுகிறது. நாம் சொன்னபோது, 'இவர்களுக்கென்ன வேலை' என்று சொன்னார்கள்; அதே கருத்தை குமாரசாமி ராஜா சொன்னபோது, ராஜா தி. மு. க. வில் சேர்ந்து விட்டார் என்றோ, அண்ணாத்துரைக்கு நண்பராகிவிட்டாரென்றோ வருத்தப்படவில்லை. தேசிய மகாசபைக்கு மாறாக, மறைத்து வைக்கப்பட்டிருந்த உண்மையை ராஜா சொல்லிவிட்டாரே என்றுதான் 'காங்கிரஸ் பெரியார்கள்' முணகினார்கள். அதற்காக ராஜா துளியும் கவலைப்பட்டாரில்லை. 'காலமிருக்கிறது முழுதும் சொல்கிறேன்' என்றார். அவர் நம்பியிருந்த காலம் அவரைத் தின்று விட்டது.

குமாரசாமி ராஜா அவர்கள், அவரது இலட்சிய வாழ்வின் இறுதிக்காலம் வரை 'ஏகஇந்தியா' என்று உழைத்திட்டாலும், தன் மொழி, தன் தாய்நாடு என்று கடைசி நேரத்திலாவது உரிமை பாராட்டிப் பேசி, நெஞ்சில் கிளை விட்டுக்கிடந்த, வடநாட்டுக்கு பணிந்துபோகும் அடிமைத்தனத்தை வெட்டி வீழ்த்திச் சொல்ல முனைந்தார் என்று நினைக்கும்போது அவரது மறைவு நமக்கு கவலையைத் தருகிறது. காலம் தாழ்த்திப் புரிந்துகொண்ட உண்மையை ஞாலம் அறிய மெய்ப்பிக்க முடியாத வகையில் ராஜா போய்விட்டாரே என்று நாம் மெய்வருந்தி நிற்கிறோம். நமக்கே இப்படி என்றால் அவரது உறவினர்களுக்கும் குடும்பத்தாருக்கும் எப்படி இருக்கும்! அவர்களுக்கு நம் அனுதாபம்!

குளித்தலைத் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகரையும் மற்ற ஐந்து சுயேச்சை அபேட்சகர்களையும் நமது கலைஞர் கருணாநிதி அவர்கள் தோற்கடித்தார்.

அறுபது நாள் அரசியற் திருவிழா!

தமிழகத்தில் ஒருவாறு தேர்தல் முடிந்துவிட்டது. ஏறத்தாழ இரண்டு மாத காலமாக தென்னுடு முழுதுமே திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. பசியெடுத்தவன் முகத்தைப் பார்ப்பதே பாவம், கேவலம், என்று எண்ணியவர்கூடத் தண்ணீர் கிடைக்காமல் தவித்தார்கள். தலைகுனிந்தால் தன் நிலை குறையும் - என்ற இறுமாப்புக்கொண்டோரும் குனிந்த தலை நிமிராமல்-நிமிர்த்த முடியாமல் குடிசைகளுக்குள் நுழைந்து நுழைந்து வந்தார்கள். அந்த ஏழைகள் குடித்த கூழையும் குடித்து ஓரிரு ஓரங்க நாடகங்களும் நடத்திக் காட்டினர்கள். மோட்டாரைப் பார்த்திராத குக்கிராமத்து மக்கள் தினம் தினம் வித விதமான மோட்டார்களைப் பார்த்துப் பெரு மூச்சுவிட்டார்கள். அவர்களில், காந்தி என்றுல் யார் என்று கேட்டோரும் உண்டு. ஏன் காந்தித் தாத்தாவைக் கூட்டிக்கொண்டு வரவில்லை-என்று கேட்டவர்களும் இருந்தார்கள். மடியிலிருக்கும் பணம் போதும், மாடியிலிருக்கும் பெட்டகத்தை ஏன் திறக்க வேண்டும் என்று காலத்தைக் கழித்தவர்களில் பெரும்பாலோருக்கு ஒரு நாளைக்கு மூன்று முறை பெட்டகத்தைத் திறக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. ஒட்டுச்சாவடிக்குத் திரண்டுவரும் வாக்காளர்களைப் போல், பாங்கிகளுக்கு பணக்கார அபேட்சகர்களின் குமாஸ்தாக்கள் வந்து வந்து போனுர்கள். குவிந்துகிடந்த கத்தைகள் வானத்து நட்சத்திரங்களைப் போல், நாணய வடிவில் பரவிடத் தொடங்கின. இரண்டொரு இடங்களில் கொலைகளும், அடிதடிகளும்கூட நடந்தன! பாராளுமன்றத் தொகுதிகள் உட்பட ஏறத்தாழ 250 போட்டிகளுக்குத்தான் இத்தனை கூத்துக்களும் நடந்திருக்கின்றன.

தமிழகத்தின் புதிய சட்டசபையில் ஒதுக்கப்பட்ட 205 ஸ்தானங்களில் காங்கிரஸ் கட்சி 201 ஸ்தானங்களுக்குப் போட்டியிட்டது. அதில் 151 இடங்களைக் காங்கிரஸ் கட்சி கைப்பற்றியிருக்கிறது. மீதமுள்ள 54 இடங்கள் எதிர்க்கட்சிகளுக்குக் கிடைத்திருக்கின்றன. அவைகளில் தி. மு. கழகத்திற்குத்தான் அதிக ஸ்தானங்கள் கிடைத்திருக்கின்றன. அடுத்தபடியாக காங்கிரஸ் சீர்திருத்தக் குழுவிற்கு 14 ஸ்தானங்கள் கிடைத்திருந்தாலும், அந்தக் குழு கட்சி ரீதியில் தனிக் கொள்கைகளை வைத்துப் போட்டியிடவில்லை.

தி. மு. கழகம் ஏறக்குறைய 117 இடங்களில் போட்டியிட்டு 15 ஸ்தானங்களைக் கைப்பற்றியிருக்கிறது. மேலும் எதிர்பார்த்த இருபது இடங்களில் குறுகிய வித்தியாசத்தில் (நூற்றுக்கணக்கில்) காங்கிரஸ் கட்சி கழகத்தைத் தோற்கடித்திருக்கிறது.

★ தமிழகத்துப் பொதுத் தேர்தல் பற்றி விருப்பு வெறுப்பின்றி இக் கட்டுரையில் விமர்சனம் செய்யப்பட்டிருக்கிறது. ★

தேர்தல் அனுபவமும், தேர்தல் காரியங்களில் ஈடுபாடும் இருந்திருக்குமானுல் தி. மு. கழகம் இன்னும் 30 இடங்களைப் பிடித்திருக்கமுடியுமென்று பிற கட்சித் தலைவர்களே கூறுகிறுர்கள். கழகத்திற்குக் கிடைத்த வெற்றியில் பெரும் பங்கு தென்னுற்காடு, வடஆற்காடு சென்னை மாவட்டங்களுக்கேசாரும்.

காங்கிரஸ் சீர்திருத்தக் குழு, காங்கிரசின்பேரில் அதிருப்திப்பட்டு, அதற்கு எதிராக 50 இடங்களில் போட்டியிட்டது. அவர்களில் 14 பேர் வெற்றி பெற்றுள்ளனர். தென்னுற்காடு மாவட்டத்திலும் மதுரை மாவட்டத்திலும்தான் இவர்களுக்கு ஓரளவு வெற்றி கிடைத்தது என்றுலும், குழுவின் தலைவர் **திரு. வெங்கிடகிருஷ்ண ரெட்யார்** ஒரு சுயேச்சை அபேட்சகரால் தோற்கடிக்கப்பட்டது வருந்தத் தக்கதுதான்.

அடுத்து பொதுவுடமைக் கட்சி. இது 55 இடங்களில் போட்டியிட்டு நான்கு இடங்களைக் கைப்பற்றியது. 18 இடங்களில் கட்டணத் தொகை இழந்துவிட்டது. அவர்கள் எதிர்பார்த்த தஞ்சை மாவட்டம் அவர்களுக்குக் கைவிரித்து விட்டது. போன சட்டசபையில் 14 கம்யூனிஸ்டு அபேட்சகர்கள் அங்கம் வகித்தது நினைவிருக்கலாம்.

காங்கிரஸ் கட்சிக்கு எதிராகத் திரண்டிருந்த மக்கள் சக்தி சிதறுண்டு போனதால், காங்கிரஸ் எதிர்பார்க்காத அளவுக்கு திருச்சி, தஞ்சை மாவட்டங்களில், முறையே 20—18, 20—17, என்று காங்கிரஸ் ஸ்தானங்களைக் கைப்பற்றிவிட்டது. மதுரை மாவட்டத்திற்கு ஈடாக திருச்சியிலும் தஞ்சையிலும் காங்கிரசு வெற்றி பெற்றதை எண்ணி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி பூரித்திருப்பதாகத் தெரிகிறது. காங்கிரசிற்கு பலம் தந்த மாவட்டங்களின் வரிசையில் சேலம் மூன்றுவது ஸ்தானம் வகிக்கிறது. 23-க்கு 19 ஸ்தானங்கள் சேலத்தில் கிடைத்திருக்கின்றன. ஆனுல் தென்னுற்காடு மாவட்டத்தில் 9 ஸ்தானங்கள்தான் காங்கிரஸ் வசம் சிக்கியிருக்கிறது.

பிரஜா சோஷியலிஸ்ட் கட்சியைச் சார்ந்த அபேட்சகர்கள் 22 இடங்களில் போட்டியிட்டார்கள். அவர்களில் இருவரே வெற்றி பெற்றனர். ஒன்பது பேர் கட்டணத் தொகையை இழந்துவிட்டார்கள்.

சென்னை சட்டசபைக்கு 337 சுயேச்சைகள் போட்டியிட்டார்கள். அவர்களில் 252 பேர் கட்டணத் தொகையை இழந்துவிட்டார்கள்; 15 பேர் வெற்றி பெற்றுர்கள். சுயேச்சைகளில் பெரும்பாலோர் இரட்டைத் தொகுதிகளிலேயே அதிகப்படியான தோல்வியைப் பெற்றிருக்கிருர்கள்.

சுயேச்சைகள், கம்யூனிஸ்டுகள், பி. சோ. கட்சி, தி. மு. கழகம் ஆகியோர் இழந்த கட்டணத் தொகைகளின் மொத்தம் **ரூ. 81,500** என்று மதிப்பிடப்படுகிறது.

இந்த முறை சட்டசபைக்கு 11 பெண்கள் வந்திருக்கிருர்கள். அவர்களில் ஒருவர் தி. மு. கழகத்தைச் சார்ந்தவர்.

மொத்தத்தில் இந்தத் தேர்தலில் காங்கிரஸ் எதிர்பாராத வெற்றியைப் பெற்றிருக்கிறது. கம்யூனிஸ்டுகள் எதிர்பாராத தோல்வியை அடைந்துவிட்டனர். அவர்கள் எதிர்பார்த்தபடி 25 இடங்களைக் கூட அவர்களால் பிடிக்க முடியவில்லை. தி. மு. கழகத்தின் தேர்தல் ஈடுபாடு கம்யூனிஸ்டுகளை தமிழகத்தில் செல்லாக்காசுகளாக்கிவிட்டது.

பிரதமர் காமராசர் டெல்லியில் நடைபெற இருக்கும் காங்கிரஸ் செயற்குழுவில் கலந்து கொள்ளப் போகிறுர். வந்ததும் புதிய தலைவர், மந்திரிகள் அறிவிக்கப்படுவர். முதல் சட்டசபை மே மாதம் இறுதியிலாவது, ஜூன் முதல் வாரத்திலாவது ஆரம்பிக்கப்படலாம்.

'அண்ணுத்துரை வந்துவிட்டார்; சட்டசபை சுவாரஸ்யமாயிருக்கும்' என்று மாற்றுர்கூட எதிர்பார்க்கும் பொன்னுன கட்டம் தமிழகத்திற்கு இப்போதுதான் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலை, பூத்து, மலர்ந்து, காயாகி, கனியாகப் பெரிதும் விரும்புகிறேம்.

வெற்றி பெற்ற தி. மு. க. அபேட்சகர்கள்

சென்னை சட்டசபைக்கு

அறிஞர் அண்ணு (காஞ்சிபுரம் தொகுதி)
ஏ. கோவிந்தசாமி (வளவனூர் தொகுதி)
எஸ். எம். அண்ணுமலை (போளூர் தொகுதி)
ப. உ. சண்முகம் (திருவண்ணுமலை-பொது)
சந்தானம் (திருவண்ணுமலை-தனி)
க. அன்பழகன் (எழும்பூர் தொகுதி)
ஏ. வி. பி. ஆசைத்தம்பி (ஆயிரம்விளக்கு தொகுதி)
சத்தியவாணிமுத்து (பெரம்பூர்-தனி)
எம். பி. சாரதி (வேலூர் தொகுதி)
எம். பி. சுப்பிரமணியம் (ஆத்தூர்-பொது)
இருசப்பன் (ஆத்தூர்-தனி)
மு. கருணுநிதி (குளித்தலை தொகுதி)
எம். செல்வராஜ் (திண்டிவனம் தொகுதி)
நடராஜன் (கள்ளக்குறிச்சி-பொது)
எம். ஆனந்தன் (கள்ளக்குறிச்சி-தனி)

★

டில்லி பாராளுமன்றத்துக்கு

ஈ. வெ. கி. சம்பத் (நாமக்கல்)
தருமலிங்கம் (திருவண்ணுமலை தொகுதி)

ஆதரவாளர்கள்

டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி (செங்கல்பட்டு - பொது)
சிவராஜ் (செங்கல்பட்டு-தனி)



செம்மாதுளே

அழகிய பெயரையும், அதைப் போன்ற அழகையையும் தாங்கி நிற்கிறது 'செம்மாதுளே'.

வடநாட்டு இராசபுத்திரர்கள் போல வீரமும் பண்பும் நிறைந்து தமிழ்க் குடியினரில் தனிக் குடியாய் வாழ்ந்தோர் கள்ளர் மரபினர். அவர்கள் பற்றிய அற்புத மானதொரு நடந்த கதையை 'செம்மாதுளே' சொல்கிறது. அதில் வரும் வாளுக்குவேலி, வைரமுத்தன், கல்யாணி, சுந்த ராம்பாள் எல்லோரும் சாகாத கதாபாத்திரங்கள். இன்றளவும் இராமநாதபுர மாவட்டத்து வீடு தோறும் பேசப்படுபவர்கள்.

'பாயும் புலியைப் பார்த்திருப்பீர்கள். படமெடுத்தாடும் நாகத்தைப் பார்த்திருப்பீர்கள். நினைத்து நினைத்து அழும் மணிப்புறுவை எங்கே பார்த்திருக்கப் போகிறீர்கள்?'

'புலியடித்துப் பொழுது போக்கும் இந்தப் பொல்லாத கள்ளன், கிளியொத்த சுந்தரியோடு எப்படித்தான் எழுத முடியும் புதிய கதையை?'

—என்பன போன்ற உரையாடல்களும்,

'இதயத்தில் பொங்கியெழும் ஆத்திரம் பழி தொள்ளாமல் போவதில்லை. உடும்பைப் பதம் பார்க்க முடியா விட்டாலும் ஓணானையாவது சந்தித்துவிட்டுத் தான் போகப் பார்க்கிறது.

'நெஞ்சு நிறைந்த ஆசை சற்று நேரம் தாழ்த்தி நிறைவேற்று வதைக் கூட மனித ஜாதி பொறுப்பதில்லை. வலிமைக் குறைவால் ஏற்படும் தோல்விக்கு போலிக் காரணங்களைச் சொல்லி மனச்சாந்தி பெற்றுக் கொள்கிறார்கள்.'

—என்பன போன்ற வரிகளும் புத்தகம் முழுவதும் நிரம்பிக் கிடக்கின்றன. சில இடங்களைப் பலமுறை படித்துப் பார்க்கும் முறையில் மிகத் திறமையாக ஆசிரியர் எழுதியுள்ளார்.

'விழி இரண்டும் நிலம் நோக்கும்போது எதிர்விழிகள் எழில் நோக்கின' — என்பது போன்றவை உயிருள்ள வரிகள். இவற்றைப் படிக்கும்போது கவிதை படிக்கும் எண்ணமே வருகிறது.

மொத்தத்தில் 'செம்மாதுளே' எல்லோரும் வாங்கிப் படிக்க வேண்டியதொரு நூல்.

எழுதியவரிடமிருந்து இது போன்ற ஏராளமான நூல்களைத் தமிழ் கூறும் நல்லுலகம் எதிர் பார்க்கிறது.

—நெல்லே. தாமரை

ஆசிரியர் : எஸ். எஸ். தென்னரசு

விலை ரூ. 1-4-0.

வெளியீட்டோர் : மலர் நிலேயம், 133, பிராட்வே, சென்னே-1.

அன்பழகன் நன்றி

சென்னை சட்டசபைக்கு எழும்பூர் தொகுதியிலிருந்து போட்டியிட்ட என்னை அன்புடன் ஆதரித்து வெற்றி பெறச் செய்த எல்லோருக்கும் எனது உளம் நிறைந்த நன்றி உரித்தாகும். தங்கள் ஒவ்வொருவரையும் நேரில் கண்டு தெரிவிக்கும் நன்றியறிதலாக இதனைக் கொள்ள வேண்டுகின்றேன். எனது தொகுதி மக்களாகிய தங்களின் நம்பிக்கைக்கு உரியவனாகிய எனக்கு தொகுதியின் முன்னேற்றத்துக்கான சிறந்த ஆலோசனைகளைத் தந்து உதவுவதுடன் மேலும் ஒத்துழைத்து ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நமது வட்டத்தின் குறைகளைக் களையவும், மக்கள் விருப்பத்தை நிறைவேற்றவும் திராவிட முன்னேற்றக் கழகத்தவன் என்ற நிலேயில், சட்ட சபையில் கடமையைத் தவறாது செய்து வருவேன்.

எனது வெற்றிக்கு அயராது பாடுபட்ட தோழர்கள் தாய்மார்கள், பெரியோர்கள் ஆகிய அனைவர்க்கும் எனது உளங்கனிந்த நன்றி என்றும் உரித்தாகும். என் வெற்றி தங்கள் வெற்றியே!

என் வெற்றிச் செய்தி கேட்டு தமது அன்புநிறைந்த வாழ்த்துரைகளைத் தமிழகத்தினின்றும், தமிழர்கள் வதியும் பிறநாடுகளினின்றும் தந்திகள், கடிதங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொண்ட அன்புடைய தோழர் கட்கெல்லாம் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழும் தமிழரும் முன்னேற ஒல்லும் வகையெல்லாம் பணி புரிவேன் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

அன்பன்,

க. அன்பழகன்.

தேர்தல் வேடிக்கை

'உமக்கல்ல இந்த ஓட்டு, உமது ஸ்தாபனத்துக்காக. நேரு, மேனனுக்காகவே உம்மை ஆதரிக்கிறேன்' இப்படி ஒரு வாக்காளர் எழுதியிருந்த துண்டுக் கடிதம் காங்கிரஸ் அபேட்சகரொருவரின் பெட்டியில் பெங்களூரில் காணப்பட்டது.

'நான் உமக்கு ஓட்டளித்துவிட்டதால் உமக்கு வெற்றி நிச்சயம்' என்றும் அவர் அதில் மேலும் கூறியிருந்தார். ஆனல் அந்த அபேட்சகரோ இறுதியில் தோற்றுப்போய் விட்டார்.

★

ஹோஷியார்பூர் பார்லிமெண்டரி தொகுதிக்கு ராணுவத்தினரிடமிருந்து வந்த 301 ஓட்டுகளும் வீணுயின.

விதிப்படி அபேட்சகர் பெயரைக் குறிப்பிடாமல் காங்கிரஸ் அபேட்சகருக்கு ஓட் செய்வதாக எழுதப்பட்டிருந்ததால், இந்த ஓட்டுகள் அனைத்தும் செல்லாமல் போய்விட்டன.

★

பிகாரிலே ராஞ்சி தொகுதியில் ஒரு சாவடியில் அத்தனை ஓட்டுகளும் பாழாகி விட்டன, சிப்பந்திகளின் அறியாமையால். அடையாளச் சீட்டுகளுக்குப் பதிலாக ஓட்டுச் சீட்டுகளிலேயே வாக்காளரை ரேகை பதியச் சொல்லி பெட்டியில் போட வைத்தனராம் அந்தச் சிப்பந்திகள்! இதன் விளைவாக அங்கு மறுபடியும் வாக்குப்பதிவு நடக்க உத்தரவிடப்பட்டிருக்கிறது.

★

நாட்டில் பல பகுதிகளில் உற்சாக வெள்ளம் அலைமோதி, கிவனற்றோரையும்கூட சாவடிக்குக் கொண்டு வந்து சேர்த்திருக்கையில் அடியோடு ஆர்வமில்லாத இடங்களும் ஒரு சில இல்லாமலில்லை. அப்படிப்பட்டவற்றில் ராஜஸ்தானில் துங்கார்பூர் ஜில்லா ஓட்டுச்சாவடிகளிலொன்று முதலிடம் பெறுகிறது. அங்கு மொத்தம் வரவேண்டிய வாக்காளர்கள் ஆயிரம் பேருக்குமேல். ஆயினும் அந்தச் சாவடி திறந்திருந்த எட்டுமணி நேரத்திலும் ஒரு வாக்காளர்கூட வரவில்லை. எனவே, கொண்டு வந்தபோது இருந்தது போலவே காலிப் பெட்டிகளையே அங்கிருந்து திரும்ப எடுத்துச் சென்றனர் அதிகாரிகள்.

★

அகில இந்தியாவிலுமே படித்த மக்கள் அதிகம் கொண்ட கேரளத்தில் தேர்தல் குறித்து அபார அக்கறை இருப்பதில் அதிசயமென்ன? போட்டி போட்டுக்கொண்டு ஓட்டுச் சாவடிகளுக்குச் சென்றனர்கள்-படித்தவரும் சரி, படிக்காதவரும் சரி. எவ்வளவோ பிரதிகூலங்களை, சிரமங்களைச் சமாளித்துக் கொண்டு எப்படியோ ஓட்டுப் போட வந்துவிட்டார்கள் எல்லோரும். கொல்லம் தொகுதியில் மற்ளுருவர் முதுகின் மீதேறி வந்த தள்ளாத கிழவர் இதற்கொரு சான்று. பட்டத்தானம் என்ற இடத்தில் ஒரு 60 வயதுக் கிழவி, உடல் நலிவுற்றிருந்த போதிலும் அதைப் பொருட்படுத்தாமல் வந்து, ஓட்டுப் போட்டபின் உயிரைவிட்டது இன்னுெரு சான்று.

★

வாடிகொல்லத்திலோ ஒரு பெண்மணி அனைவரையும் மிஞ்சிவிட்டாள். நிறைமாத கர்ப்பிணி அவள். ஓட்டுப் போடும் நேரத்தில் பிரசவ வேதனைகூட ஆரம்பித்துவிட்டது. எனினும் அதை லட்சியம் செய்யாமல் ஓட்டுச் சாவடிக்கு விரைந்தாள். அங்கு தன் பிறப்புரிமையைச் செலுத்திவிட்டு அவள் வீட்டுக்குத் திரும்பியதுதான் தாமதம், பிள்ளையும் பிறந்துவிட்டது! இவ்வாறு உற்சாகத்துடன் அனைவரும் வந்தபோதிலும் ஓட்டுச் சாவடிகளில் நுழைந்ததின்பு குழம்பியவர் பல பேர். எழுத்தறிவற்றவர் கள்தான் என்பதில்லை, படித்தவர்களும்கூட யாருக்கு ஓட்டுப் போடுவது என்று புரியாமல் குழம்பினர்கள். ஒரு சிலர் இதுகாரணமாக ஓட்டுப் போடாமலேயே கூடத் திரும்பி விட்டனர். கொல்லம் நகர ஓட்டுச் சாவடியிலேயே இவ்விதம் இருவர் திரும்பிச் சென்றனர். அவர்களிலொருவர் வக்கில்; இன்னுெருவரோ பிரசித்தமான சமூக ஊழியர்! படித்தவர்களே இப்படியென்றல் படிக்காதவர்கள் குழப்பமடையக் கேட்பானேன்? குறிப்பாக விரலில் மசி தீட்டுவது அவர்களை மிரள வைத்தது. அது அசிங்கமாக இருக்கிறது என்று ஆட்சேபித்தார், கிளிகொள்ளூரில் ஒருவர். அங்கேயே இன்னுெரு கிழவி, அதை ஏதோ மருந்து ஊசி என்று நினைத்துக்கொண்டு மருண்டு விட்டாள்!

★

ஓட்டுப் பதிவு முறை தெரியாததால் மட்டுமல்ல, ஓட்டுச் சாவடி இருந்த முறையையும் சில படித்த வாக்காளர்களையும் கூடக் குழப்பச் செய்துவிட்டது. கோபிசெட்டிப்பாளையத்துச் சாவடிகளில் ஒன்று இப்படிப்பட்டது. ஸ்தல பள்ளிக்கூடங்களிலொன்றில் அமைந்திருந்தது அந்தச் சாவடி. மாணவர்களுக்கு வழி காட்டவென 'அவசரத்தால் அனர்த்தமே' 'போலி நண்பர்களை நம்பாதே' 'நல்லதையே நினை, பேசு, பார்' என்பவை போன்ற பொன் மொழிகள் அதன் சுவர்களில் பொறிக்கப்பட்டிருந்தன. படித்த ஓட்டர்கள் இவற்றைப் பார்த்ததும் 'சாவடியினுள்ளும்கூடவா பிரசாரம்' என்று மலைத்தனர். பள்ளிப் பிள்ளைகளுக்காகவே அவை என்று அதிகாரிகள் விளக்கிய பிறகுதான் அவர்களுக்கு விஷயம் புரிந்தது. எழுத்தறிவற்றவர்களோ, ஏதோ ஒரு கட்சியின் தேர்தல் கோஷமென அவற்றைத் தவறுக எண்ணினர். அவற்றைப் படித்துச் சொல்ல வேண்டுமெனச் சிலர் அதிகாரிகளை வற்புறுத்தவும் செய்தனர். விளக்கியதும் அவர்கள் குழப்பம் அதிகரித்ததேயொழியக் குறையவில்லை!

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

பின்னும் சிலநாள் சில பொழுதே தங்கலாம் - விரைந்து அதை விடுத்து எல்லேயிலா நரகப்பரப்பில் புகுந்தாக வேண்டும். பாலே நில மக்களுக்கு இதுவே தெய்வ நியதியாய் இருந்தது. ஆனுல் புதர் வீட்டு நியதியை மாற்றமுடியாத ஹசன் - இதை மாற்றியமைக்க முற்பட்டான், மாற்றியமைத்தான்! புதர் வீட்டைச் செப்பம் செய்யும் ஆற்றலோ, அறிவோ, நேரமோ, கருத்தோ இல்லாத அவனுக்குப் பாலேவன உலகையே மாற்றியமைக்க ஆற்றல் இருந்தது. அறிவு இருந்தது. நேரமும் கருத்தும் இருந்தன!

ஒருநாள் மணல் மலே, மறுநாள் ஆழ்கசம் : ஒருபொழுது மேடுபள்ளங்கள், பாதைகள், மறுபொழுது உருவிலாப் பரப்பு என்ற ஓயாத மாறுபாட்டு நிலேயுடையது பாலேப் பரப்பு. அது எல்லேயற்ற கடல் போன்றது மட்டுமன்று; திக்குத் திசையற்ற வானவெளி போன்றது. மனிதன் ஆற்றலேக்கண்டு பேய்ச் சிரிப்புச் சிரிக்கும் இயற்கையின் அழிவாற்றல் இதுவே! அதில் பாதை செப்பனிடுவதென்பது காலமும் தொலேவும் வென்றுவரும் இந்நாளைய மேலேயுலகுக்கூட எண்ணுதற்கெளிய செயலன்று. அது மனிதரால் நினேக்க முடியாத, ஆற்றலுடையவரால் செய்ய முடியாத, அறிஞரால் திட்டமிட முடியாத, கலேஞர்களால் கற்பனேயிற் காண முடியாத செயல் ஆகும். ஆயினும் அன்பு இத்தனேயிலும் வலிமை மிக்கது. ஹசன் தெய்வ உள்ளத்தினின்று அது எப்படியோ கற்பனே செய்தது, திட்டமிட்டது, வழிகண்டது, செய்து முடித்தது!

பிரயாணிகள் எறிந்து சென்ற நைந்து கிழிந்த சாக்குகளே, பைகளே, துணிகளே ஹசன் ஒவ்வொன்ருகப் பொறுக்கித் திரட்டினுன். தன் உணவுக்காக, உடைக்காக எவரிடமும் இரந்தறியாத அவன் இப்போது தொலேநகரங்களுக்குச் சென்று வீடு வீடாக, தெருத்தெருவாக இரந்தான். ஆனுல் அவன் காசு கோரவில்லே- உணவு கோரவில்லே, உடை கோரவில்லே - சாக்குகள், பைகள், நைந்து கிழிந்த கந்தல்கள் மட்டும் வேண்டுமென்று இரந்தான். பைத்தியத்தில் ஒரு இரவல் பைத்தியம், இரவலரிடையே ஒரு பைத்திய இரவலன் என்றெண்ணிக் கொண்டே செல்வரும் ஏழை எளியவரும் தமக்கு எவருக்கும் வேண்டாத பயனற்ற பீத்தல் சாக்குகளே, பைகளே, அழுக்கேறிய கந்தல் கூளங்களே அவன்மீது விசி எறிந்தனர் - அருவருப்பான அவன் தோற்றத்தை மறைக்கவும் அவை உதவின - அத்தோற்றத்திலிருந்து விரைந்து விடுபடவும் அவை அவர்களுக்கு உதவின!

சாக்குகள், பைகள், கந்தல்கூளங்களே அவன் மூட்டை மூட்டையாகச் சுமந்துகொண்டு, சில சமயம் மலேமலேயாக உருட்டிக்கொண்டு, வேறு சில சமயம் அவற்றுடன் புரண்டவண்ணம் அவன் திரிந்தான். அவன் புதர் வீட்டைச் சுற்றிலும் அவை மதில்மேடுகளாக, மலேகளாகக் குவிந்தன. மலேகளில் புதர் வீடும் மறைந்தது, அவனும் புதையுண்டான். அவன் ஏலா நோயாளி, திராசகதி, அருவருப்பான தசைப் பிண்டம் மட்டுமல்ல- அவன் ஒரு பைத்தியம் - கந்தல் கூளப் பைத்தியம் என்று அவன் திசையில் கண்பார்வை செல்ல விடாமலே நழுவினர் பலர். ஆனுல் கந்தல்கூளங்களே அவன் நெடுநாளேக்கு மலேயாக நிற்க விடவில்லே. அவை விரைவில் கரைந்தன. அவனுக்கு அவை சாக்குகளல்ல, பைகளல்ல, கந்தல்கூளங்களல்ல. . ஊழை ஊழால் ஊழையே துணேக் கருவியாகக் கொண்டு வெல்ல முற்படுபவன்போல, மணற்புயலே மணலாலேயே தடுக்க எண்ணி, அதற்காக அவன் அன்பின் அறிவு மையம் கண்டுபிடித்த துணேக்கருவிகளாக அவை அமைந்தன. சாக்குகளிலும் பைகளிலும் கந்தல்கூளங்களிலும் கட்டப்பட்ட மணலே அவனுக்கு மணற்புயலின் அழிவு தடுக்க உதவும் மணற் கோட்டைக்குரிய செங்கல்கள் ஆயின.

சிறுகச்சிறுக அவன் பாலேவனப் பாதைகளே ஒவ்வொரு பகுதியாகத் தேர்ந்து, அவற்றைத் தற்காலிகமாகச் சமதளப்படுத்திஞன். புயல் அவற்றை அழிக்குமுன் அவன் விரைந்து அவற்றின்மீது தளர்வாக மணல் பெய்யப்பட்ட சாக்குகளேப் பரப்பிஞன். பின் அத்தற்காலிகப் பாதையின் இருபுறமும் மணற் சாக்குகள், பைகள், மூட்டைகளே அடுக்கி மணற் கோட்டைகள் அமைத்தான். பீத்தல் சாக்குகள், நைந்து கிழிந்த பைகள், சிலசமயம் மணற் குவியல்களே நடுநடுவே வைத்து அவன் சிக்கனமும் பேணிக் கோட்டையையும் உலேக் கோட்டை ஆக்கிஞன். மணற் புயல் இருபுறமும் குவித்த மணலே இச்சுவ உலவாக்கோட்டை ஆக்கிற்று. அம்மதில்களின் பாதுகாப்பிலே அவற்றின் ஊடாக, அவன் சுட்ட களிமண் குழாய்களே அடுக்கிப் பச்சைக் களிமண்ணில் பொதிந்து இணேத்து, அக்குழாய்களின் மூலமாகவே நறுஞ்சுனேயிலிருந்து ஒழுகும் கழிவு நீரைக் கசியவிட்டான். இக்கசிவின் ஈரம் இருபுறமும் சோலே வனச்சாலே வளர்த்தது. சாலேயின் மரஞ்செடிகொடிகள் பாதையில் நடப்பவருக்கு நிழலும் நிலத்துக்குக் குளிர்ச்சியும் அளித்தன. அத்துடன் அவற்றின் வேர்கள் விரைவில் மணற்சாக்குகளின் நீடித்த வலுவை நிலேயான உயிர் வலு ஆக்கின.

முன்பு பாலேவனம் எங்கும் ஆங்காங்கே மட்டுமே துளி துளிச் சோலே வனங்கள் இருந்தன. இப்போது சோலேவனத்துக்குச் சோலே வனம் சோலேவனச் சாலேகள் அமைந்தன. பாலேவனக் கப்பல்கள் என்று அழைக்கப்படும் ஒட்டகைகள் செல்வருக்குமட்டுமே உதவின. அவர்களுக்கும் முயற்சி குறைந்ததேயன்றி அயர்ச்சி நீங்கவில்லே. வெப்பிலிருந்து மிகுதி பாதுகாப்பும் கிடைக்கவில்லே. இப்போதோ ஹசன் முயற்சியால் செல்வர்களுக்கும் ஏழை எளியவர்களுக்கும் விலங்குகளுக்கும் ஒருங்கே நிழலும் குளிர்ச்சியும் நீரும் உணவும் நெடுகக் கிடைக்கலாயின. பாதை நெடுக ஹசன் மரங்களிலே சுற்றிப் புல் உரண் பாவிஞன்.

ஹசன் உழைப்பின் பயனேயே இதுவரை கண்டு வியந்த மக்கள் அந்த உழைப்பையே நேரில் கண்டு இன்னும் வியப்பும் ஆர்வமதிகம் கொண்டனர். இப்போது அவன் கண்காணுத் தெய்வமாக, தோன்ருத் தெய்வ உள்ளமாக இல்லே. அவன் கண்கண்ட தெய்வ உருவாகப் பேணிப் பூஜிக்கப்பட்டான், வணங்கப்பட்டான். அவன் உருவம் அவன் தெய்விக அன்புள்ளத்தைப் பெருக்கிக் காட்டவே உதவிற்று. அவன் ஏலாமை அவன் தெய்விக ஆற்றலுக்குச் சான்றளித்தன. அவன் அன்பின் அளவு மக்கள் கடவுளேப்பற்றிக் கொண்டிருந்த வரண்ட எண்ணங்களுக்கு களிப்பூட்டிற்று. அவன் புகழ் எங்கும் பரவிற்று — குடிசைகளில் தவழ்ந்தது, கூடகோபுரங்களில் உலவிற்று. நாள்தோறும் மன்னர் இளங்கோக்கள் நூற்றுக்கணக்கில், அறிஞர் கலேஞர் ஆயிரக்கணக்கில், மக்கள், ஏழை எளியவர் பதினுயிர நூருயிரக் கணக்கில் அவன் தெய்வ உருக்காண வந்து வந்து குழுமினர் —ஒருவரை ஒருவர் முந்தி நெருக்கினர்.

புகழுக்கு — ஆர்வமதியுருவான புகழ்த் தென்றலுக்கு—அன்புருவான புகழ் இசைக்கு கலந்தவன் தான் அவன். மன்னர் வீரர், அறிஞர் கலேஞர் ஆற்றல் எண்ணிப் புழுங்கியவன்தான் அவன். ஆனுல் இப்போது புகழ் அவனேச் சுற்றிப் புயலாய் அடித்தது, எக்காளமாய் முழங்கிற்று. மன்னர் வீரர், அறிஞர் கலேஞர் ஆகிய எல்லார் புகழும் தாண்டி, தெய்வத்துடனேயே போட்டியிடும் அரும்புகழ் ஆயிற்று. ஏனெனில் அம்மன்னர், வீரர், அறிஞர், கலேஞரே வியத்தகு தெய்வத்தைக் காணவருவதுபோல அவனேக் காண வந்தனர். ஏழையர் குடிசையை இன்பவாழ்வாக்கப் பாடுபட்ட அவனுக்கு, பாலேவனத்தையே செல்வர் மாளிகை சூழ்ந்த சோலேவனம், சாலேவனம் ஆக்கிய அந்த ஏழைபங்காளனுக்கு உரிய புதர்வீட்டைப் பொன்மாளிகையாக்க இப்போது செல்வர் விரைந்தனர். ஏழைகள் தொண்டடுங்கிய அவன் சூழலே அரண்மனேச் சூழலாக்க மன்னர்கள் போட்டியிட்டு முந்தினர் அருவருப்புக்குரிய அவன் கூனிய ஏலாநோயுடல் அரைகுறையாக மூடிய கந்தலகற்றிப் பொன் அணிமணி பட்டாடை, பஞ்சணே மலரணே அனேக்க ஏழையரும் செல்வர்களும் வீரமைந்தர்களும் அழகிளம்பூவையரும் அரும்பாடுபட்டனர். இவற்றை அவன் ஏற்கவில்லே, மறுக்கவில்லே. ஆனுல் புகழுக் கேங்கிய அவனது நைந்த அன்புள்ளம் ஒருபுறம் ஆறுதல் பெற்றது. - ஒருபுறம் சிரித்தது! ஆனுல் இவ்விரண்டு வகை உணர்ச்சிகளிடையே புதிய ஒரு வேதனேயும் எழுந்தது. ஏழை எளியார் தொண்டை எல்லாரும் மதித்தனர் - ஏழையும் செல்வரும் மதித்தனர் - தெய்வப் பண்பாகப் போற்றிப் பூசிக்கநெருங்கினர்-அதற்காக உலகின் உழைப்பும் செல்வமும் குவிக்க முற்பட்டனர்! ஆனுல் அவ் ஏழையின் ஒரு சிறு கூறினே ஏழைகளோ, அச்செல்வத்தின் ஒரு திவலேயைச் செல்வர்களோ அவ் ஏழை பணியில் ஈடுபடுத்த முனேவதில்லே. அவர்கள் அன்புத் தெய்வத்தைப் பூசித்தனர் - வழிபடவில்லே. அன்பே உறம் என்று கண்ணுரக் காண்கின்றனர்-ஆனுல் பின்பற்றும் அறம் அதுவன்று!

ஆரவாரப் புகழ்ப் பூசனேகளே விரும்பாமல், அதே சமயம் அவற்றை வெறுப்பதாகக்கூடக் காட்டிக்கொள்ளாமல், தொண்டின் கடுமையையும் புகழின் வெறுமையையும், அன்பின் அரும்பெறல் நிலேயையும் அஃது இல்லா அறத்தின் மலிவையும் எண்ணி ஹசன் புதிய புன்முறுவலுடனும் புதிய ஏக்கத்துடனும் இயற்கையின் அமைதியில் அறிந்தான். அவன் கண்கண்ட மனித உண்மைஉலகம் மீட்டும் மெள்ள மெள்ள மறந்தது- அவனேக் கண்காணுத் தெய்வத்தின் கண்காணு வடிவாக்கி அம்முறையிலே பூசனேயும் நடத்திற்று.

[அரபிக்கதை ஒன்றைத் தழுவியது]

நன்றி

சென்னே சட்டசபை மதுரை மத்தியத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழக அபேட்சகஞகப் போட்டியிட்ட என்னே-(ஜாதி வெறியும் பணமும் தாராளமாக நடமாடியும்) - ஆதரித்துப் பணிபுரிந்த தொண்டர்களுக்கும் தாய்மார்களுக்கும் வாக்காளர் பொதுமக்களுக்கும் என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, நான் பொதுக் கூட்டங்களில் சொல்லி வந்தபடி, நான் தோல்வியடைந்தாலும் பொதுமக்களுடைய தொண்டனுக தொடர்ந்து பணியாற்றுவேன் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்
எஸ். முத்து.

புதிய மந்திரி சபையில்...?

★

ஏப்ரலில் உருவாகப் போகும் புதிய மந்திரி சபையில் கீழ்க்கண்டவர்கள் அங்கம் வகிப்பார்கள் என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி வட்டாரத்தில் பேசிக்கொள்ளப்படுகிறது. இதில் எத்தனே சத விகிதம் உண்மை என்பதை அதிகாரப் பூர்வமான பட்டியல் வந்ததும் ஒப்பிட்டுப் பாருங்கள்!

எஸ். ராமசாமி நாயுடு (சபைத்தலேவர்)
கே. காமராஜ்
சி. சுப்ரமணியம்
கக்கன்
சௌந்தரம் ராமச்சந்திரன்
ஏ. நேசமணி
என். மகாலிங்கம்
யு. கிருஷ்ணராவ்
எஸ். எஸ். ராமசாமிப் படையாச்சி
காளியண்ணக் கவுண்டர்



டெல்லி சட்டசபைக்கு அலங்காரமாக விளங்குகிறவர் மந்திரி டி. டி. கே தான்.

—மரகதம் அம்மாள்.

உண்மை! உண்மை! முக்காலும் உண்மை!

—உண்மை அறிந்தவர்.

★

என்னைக் கையாலாகாதவன் என்று நினைக்காதீர்கள்.

—சி. சுப்ரமணியம்.

சே! சே! நாங்கள் என்ன நினைப்பது, உங்கள் செயலே இதை மெய்யாக்கி வருகிறதே!

—பொதுமக்கள்.

★

கள்ளு போலதலையை விட காங்கிரசின் பதவி வெறி மோசமானது!

—கிருபளானி.

தயவு செய்து இந்தச் செய்தியை எங்கள் காமராசரின் காதுகளிலும் பக்தவத்சலத்தின் காதுகளிலும் உரக்கச் சொல்லுங்கள்.

—காமராசர் அனுதாபி.

★

காளைமாடுகள் புடை சூழ ஈ. வே. ரா. ரத ஊர்வலம்.

—பத்திரிகைச் செய்தி.

போகட்டும் போகட்டும்! கடைசிக் காலத்தில் மாடுகளாவது வந்து சேர்ந்ததே!

—ஒரு அனுதாபி.

★

காங்கிரசுக்கு என்னைத் தவிர வேறு நாதி இல்லை!

—ஈ. வே. ரா.

கோபுரத்துப் பொம்மை, தான் கோபுரத்தைத் தாங்கிக் கொண்டிருப்பதாக நினைக்குமாம்!

—ஒரு காங்கிரஸ்காரர்.

★

நாங்கள் சமையல் செய்து வைக்கிறோம். தி. மு. கழகம் சாப்பிட வருகிறது.

—காமராசர்.

பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லவேண்டும்; நீங்களாவது, சமையலாவது செய்யறதாவது?

—காமராசரை அறிந்தவர்.

★

காமராசருக்கு சிவப்புப் பெண்ணாகப் பார்த்துக் கல்யாணம் செய்து வையுங்கள் என்று ஜெயித்து வந்த ஒரு பெண் மெம்பரிடம் வாக்காளர் கோரினார்.

—பத்திரிகைச் செய்தி.

சே! சே! கருத்த மாப்பிள்ளைக்கு எவன் ஐயா செவத்தப் பெண்ணைத் தருவான்?

—பெண்ணின் தகப்பனார்.

திராவிடர் கழகத்தின் பெரியார் தொண்டர்படை எதையும் சமாளிக்கத் தயாராயிருக்கிறது. இத் தொண்டர் படைக்கு அகிம்சையில் நம்பிக்கையில்லை.

—விடுதலை.

இதைச் சொல்ல வேறு வேண்டுமா? நீங்கள் செய்துவரும் கலாட்டாக் காரியங்களிலிருந்தே இது தெரிகிறதே!

—ஒரு நல்லவர்.

★

ஈ. வே. ராமசாமி நாயக்கர் பிள்ளையார் கோயில் தர்ம கர்த்தா.

—பத்திரிகைச் செய்தி.

பேசுவது நாஸ்திகம்! கடைப் பிடிப்பது ஆஸ்திகமா? வேடிக்கையாகத்தான் இருக்கிறது!

—செய்தி அறிந்தவர்.

★

திராவிடர் கழகத்தின் தேர்தல் நோக்கம்—

—விடுதலை.

அடடே! திராவிடர் கழகம் எப்போது தேர்தலில் குதித்தது?

—ஒரு சந்தேகி.

★

அரசாங்கத்தை ஏமாற்றி பணம் சம்பாதித்ததாக பம்பாய் ராஜ்ய காங்கிரஸ் எம். எல். ஏ. கைது செய்யப்பட்டிருக்கிறார்.

—பத்திரிகைச் செய்தி.

பம்பாயில் தானே! இங்கே இல்லையே! அப்பா! பிழைத்தேன்.

—ஒரு காங்கிரஸ் எம். எல். ஏ.

★

கல்கத்தாவில் வோட்டு எண்ணுமிடத்தில் அடிதடி.

—பத்திரிகைச் செய்தி.

கல்கத்தாவில் மட்டும் தானா? இங்கே என்ன சும்மாவா இருந்தோம்?

—ஒரு தி. க.

★

மந்திரியாக இருப்பதால் எனக்கு லாபம் கிடையாது. நஷ்டம்தான் ஏற்படுகிறது. வக்கீல் வேலை பார்த்தால் ஏராளமாகப் பணம் சம்பாதித்து விடுவேன்!

—சி. சுப்ரமணியம்.

தயவு செய்து அப்படியே செய்யுங்கள். எங்கள் காமராசர் பயமில்லாமலாவது இருப்பார்.

—ஒரு தி. க.

★

நாங்கள் என். ஜி. ஓ.க்களைக் காக்காய் பிடிக்கவில்லை.

—சி. சுப்ரமணியம்.

இல்லை யில்லை! தலையைத் தடவிக் கொடுத்திருக்கிறீர்கள், அவ்வளவுதான்.

—அனுபவசாலி என். ஜி. ஓ.

★

நான் மூன்று நாட்களுக்கு நன்றாகத் தூங்கப் போகிறேன்.

—காமராசர்.

பொறுங்கள்! சட்டசபை நடவடிக்கைகள் ஆரம்பமானவுடன், வழக்கம் போல் சட்டசபையிலேயே தூங்கலாம்.

—ஒரு கிண்டல்காரர்.

நாடு இழந்த காதலன்!

அவன் மன்னன்! ஆனால் நாடோடி! பலருக்குத் திகைப்பு ஏற்படும். நாடோடி! அவன் மன்னனா? மன்னன் எப்படி நாடோடியானான்? ஆம்! உண்மை. மறையாத கதிரவன், பரந்த சாம்ராஜ்யம் என்று கூறப்பட்ட ஆங்கில சாம்ராஜ்யத்தின் மணிமகுடம் தாங்கவேண்டியவன்தான் நாடோடியானான். இன்றல்ல, இருபது ஆண்டுகளுக்கு முன்பு. ஏன் என்ற கேள்விக்கு பதில் எல்லோருக்கும் தெரியும். ஆனால் காலத்தின் வேகத்தில் நினைவு தேய்ந்து போயிருக்கும்.

தந்தைக்குப் பிறகு குடும்பத்தின் மூத்த மகன்தான் மன்னனாக வேண்டும்-ஆங்கில நாட்டின் விதிமுறைப்படி. ஆனால் அதற்கு அங்கே தடையொன்று கிடந்தது.

நாட்டு மக்கள் மட்டுமல்ல, அரச குடும்பத்தினரும், ஆட்சிக்கு வலது கை என்று கூறப்படும் மதகுருக்களும் சட்டத்தை நீட்டினர் வின்சர்கோமகனுக்கு முன்னே! பணிந்தானா அந்தப் பாராள வேண்டியவன்? இல்லாவிட்டால் இந்த ராஜ்யம் உனக்குக் கிடைக்காது என்று மிரட்டினர், உருட்டினர். அஞ்சவில்லை அந்த ஆண்மையாளன். அவன் செய்த தவறு இதுதான். அரச குடும்பத்தைச் சேராத ஒரு பெண்ணைக் காதலித்தான். அவளையே திருமணம் புரிந்து கொள்வேன் என்றான்.

"முடியாது! முடியாது! அரசகுலத்திலே உதித்த பெண்கள் அமர்ந்த அரியாசனத்தில் அவள் அமருவதா! ராணி விக்டோரியாவைக் கேலி செய்வதாகும் இச்செயல்! புகழ் மண்டிக்கிடக்கும் இக்குடும்பத்திலே தோன்றிய மாசு நீ! அவள்தான் வேண்டுமென்றால் சாம்ராஜ்யம் உனக்குக் கிடைக்காது!" என்று கூறினர். அவன் பயந்து விடுவான் என்று எண்ணினர். ஆனால் அவனோ விரிந்து பரந்த இந்த சாம்ராஜ்யம் எனது காதல் சாம்ராஜ்யத்துக்கு முன் தூசு. வைரம் பதித்த மணிமுடி வேண்டாம்! உல்லாச வாழ்வு வேண்டாம்! ராஜபோகம் வேண்டாம்! அரசோச்சும் செங்கோல் வேண்டாம்! மாளிகை வாசம் வேண்டாம்! இவைகள் அனைத்தையும் இழந்துவிட்டு என் காதலியோடு, கானகத்திலே வசிக்கவும் தயார். அவளது புன்சிரிப்பே மணிமகுடம்; அவளது தேனூறும் மொழிகள் செங்கோல். அந்தக் கானகமே எங்கள் மாளிகை, சாம்ராஜ்யம் எல்லாம். உலகத்தின் எந்த மூலையிலும், எப்படிப்பட்ட நிலையிலும், வாழத் தயார்! அவள் மட்டும் உடனிருந்தால் போதும்" என்று கூறி, அரியாசனத்தை உதறிவிட்டுப் போய்விட்டான்.

அன்று அவன் அப்படிப் போயிருக்காவிட்டால் இன்று எலிசபெத், ராணியாக மகுடம் தரித்திருக்கமுடியாது.

இருபது ஆண்டுகள்-ஒருவனுக்கு அளிக்கப்படும் ஆயுள் தண்டனை காலம்-போயும்கூட அந்த நாட்டு மக்கள், அவன் தன் காதலியுடன் அந்த நாட்டிலே வந்து வாழ்வதற்குத் தடைபோடுகின்றனர். ஆமாம்! பத்திரிகை ஒன்று மக்களின் விருப்பத்தைத் தெரிந்துகொள்ள வாக்கெடுப்பு நடத்தியது. அதில் 51 சத விகிதம், வெளி நாட்டிலேயே அவர்கள் வாழட்டும் என்றும், 3 சத விகிதம், எப்படியாவது தொலையட்டும், நாம் ஏன் கவலைப்பட வேண்டும் என்றும் 46 சத விகிதம் மீண்டும் அவர்கள் வரத்தான் வேண்டும் என்றும் கூறியிருக்கின்றனர்.

ஆனால் மற்றொரு பத்திரிகை "இருபது ஆண்டு தண்டனை போதும். அவர்கள் மீண்டும் இந்த நாட்டு மண்ணிலே அமைதியாக வாழட்டும். மக்கள் உள்ளத்தில் ஏற்பட்ட கசப்பும், ஆத்திரமும் மறைந்துவிட்டன" என்று எழுதியிருக்கிறது.

ஆனால், கடைசியாக முடிவு கூறவேண்டியது ராணிதான். அவள் கூறிவிட்டால் அதுவே சட்டமாகிவிடும். ரத்தபாசம் இதைக்கூடவா செய்யாது! 'சரி'யென்று அவள் சொல்லிவிட்டால் பிறந்த பூமியிலே புகழோடும், அமைதியோடும் வாழ்வார்கள், நாடோடியாய் வாழ்பவர்கள்.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6. தமிழ்நா